| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 16.06.2026 | |
| CC No. 05/2025 | |
| சாட்சி :PW3 | |
| பெயர் : திரு. சண்முகம் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பழனியாண்டி | தொழில் : விவசாயம் |
| கிராமம் : சாத்தான்பாடி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 56/2026 |
| எதிரி ஆஜர் இல்லை , வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்தில் இறந்து போன மூக்காயி என்பவர் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர் ஆவார். அ.சா.1 வெள்ளைக்கன்னுவை தெரியும். 19.11.2023 அன்று வளநாடு, கைக்காட்டிக்கு காலை 06.00 மணியளவில் விவசாயம் வேலைக்காக ஆட்களை அழைக்க சென்ற நான் சர்வீஸ் சாலையில் வடக்கிலிருந்து தெற்காக சென்றுகொண்டிருந்தேன். எனக்கு 20 அடிக்கு முன்பாக ரோட்டின் இடது புறமாக வெள்ளைக்கன்னுவும், மூக்காயிம் வடக்கிலிருந்து தெற்காக நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். மூக்காயி, வெள்ளைக்கன்னுவிற்கு வலதுபுறமாக சென்று கொண்டிருந்தார். அப்போது திருச்சியிலிருந்து மதுரை நோக்கி மேம்பாலத்தில் வந்த யமஹா இருசக்கரவாகனம் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மூக்காயி மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் மூக்காயிக்கு வலது கால், வலது கை, உள்ளிட்ட பகுதிகளில் இரத்த காயம் ஏற்பட்டது. விபத்தில் காயமடைந்த மூக்காயி மீட்டு நானும், அவரது மகன் வெள்ளைக்கன்னுவும் தனியார் ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்தை ஏற்படுத்திய இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்த நபரை சம்பவ நேரத்தில் பார்த்தேன். அவர்தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை, அவர் பெயர் நரேசுபாண்டியன் என்றும் திருச்சி களத்துாரை சேர்ந்தவர் என்பது அப்போதைய விசாரித்த வகையில் தெரியவந்தது. காயமடைந்த மூக்காயை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கியிருந்து

மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அவர் கொண்டுசெல்லப்பட்டார். அங்கு அவர் 21 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**2.** சம்பவ இடமானது திருச்சி – மதுரை,தேசிய நெடுஞ்சாலை, நான்கு வழிச்சாலை என்றால் சரிதான். வளநாடு, கைக்காட்டி என்றால்சரிதான். திருச்சி – மதுரை,தேசிய நெடுஞ்சாலை தெற்கு வடக்காக செல்கிறது என்றால் சரிதான். சம்பவ இடமானது கைக்காட்டி பாலத்தின் தென்பகுதியில் நடந்தது என்றால் சரிதான். உயர்மட்ட பாலத்தின் அருகில் மேற்கு பகுதியிலும், தெற்கு பகுதியிலும் பிரிவு சாலைகள் உள்ளது என்றால் சரிதான். பாலத்தின் இரண்டு பகுதியிலும் சர்வீஸ் ரோடு உள்ளது என்றால் சரிதான். பாலத்தின் கீழ் கிழக்கு பகுதியில் வளநாடு செல்லும் பிரிவு ரோடும், மேற்கு பகுதியில் சுக்காம்பட்டி செல்லும் பிரிவு ரோடு உள்ளது என்றால் சரிதான். சத்தம்கேட்டு சுமார் 10, 20 பேர் வந்து வேடிக்கை பார்த்திருப்பார்கள்.

3.சம்பவதினத்தன்று கோட்டைபளுவஞ்சி செல்வதற்காக அன்றைய தினம் வந்து கொண்டிருந்தார்கள். இந்த விபத்த நடந்த இடம் சர்வீஸ் ரோட்டின் வேகத்தடைக்கு தென்புறமாக சுமார் 25 அடி துாரத்தில் நடந்துள்ளது. சம்பவ தினத்தன்று நான் புகார் கொடுக்க அவர் உடன் செல்லவில்லை. நான் முதலுதவிக்காக சென்றுவிட்டேன். விபத்து ஏற்பட்டவுடன் இருசக்கரவாகனம் கிழக்கு மேற்கு திசையை நோக்கியிருந்தது. விபத்துநடந்தவுடன் தார் ரோட்டில் இருசக்கரவாகனத்தின் டயர் தடம் சுமார் 4, 5 அடி துாரத்தில் இருந்தது. இருசக்கரவாகனம் ஓட்டிய நபருக்கும் காயம் இருந்தது. விபத்து நடந்தன்று காயம்பட்டு இறந்துபோன நபர் கையில் ஒரு பையுடன் வந்திருந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வளநாடுகாவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

3. நான் கையெழுத்து செய்த பார்வை மகசரில் விபத்திற்குள்ளான இருசக்கரவாகனத்திற்கு சேதாரம் மற்றும் காயம்பட்ட நபர் தார் ரோட்டின் எந்த பகுதியில் கிடந்தார் என்ற விபரம் இருந்ததா என்றால் இருந்தது. சம்பவம் சம்மந்தமாக அருகில் உள்ள கடைக்காரர்களை யாரையாவது விசாரித்தார்களா என்பது பற்றி தெரியுமா என்றால் விசாரித்தார்கள். தார் சாலையின் இருபுறமும் தேசிய நெடுஞ்சாலையால் விளம்பரபலகைகள் உள்ளது,அந்த விளம்பர பலகையில் உயர் மட்டம் பாலம் உள்ளதாகவும், தார் ரோட்டின் இருபுறமும் பிரிவு சாலைகள் உள்ளதாகவும், தார் ரோட்டின் இருபுறமும் சர்வீஸ் சாலையில் வேகத்தடைகள் உள்ளதாக விளம்பரங்கள் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

4. சம்பவம் நடந்தன்று நான் அங்கு தான் இருந்தேன். இருசக்கரவாகனத்தின் டயர் தடம் ஏதும் சம்பவ இடத்தில் இருந்ததா என்றால் இல்லை. நான் கையெழுத்து செய்த பேப்பரில் உயர் மட்டும் பாலம் அந்த இடத்தில் இருந்ததாகவும், இருபுறமும் சர்வீஸ் ரோடு இருந்ததாக எழுதப்பட்டிருந்தது என்றால் நான் படித்து பார்க்கவில்லை. சம்பவ நடந்த நேரம் காலை 06.00 – 07.00 மணியிருக்கும். காயம்பட்டு இறந்த நபர் எனது சின்னம்மா ஆவார். விபத்து கோரி நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த கையெழுத்தை வளநாடு காவல்நிலையத்தில் வைத்து எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 16.06.2026 | |
| CC No. 05/2025 | |
| சாட்சி :PW4 | |
| பெயர் : திரு. மலைச்சாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. தொத்தன் | தொழில் : வழக்கறிஞர் |
| கிராமம் : கோட்டைபளுவஞ்சி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 63/2026 |
| எதிரி ஆஜர் இல்லை , வழக்கறிஞர் ஆஜர்) | |

-------------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் என்னோடு மாணிக்கம் என்பவர் கையொப்பம் செய்தார். 19.11.2023 அன்று பகல் 02.00 மணியளவில் வளநாடு,கைக்காட்டியில் மூக்காயி என்பவருக்கு விபத்து ஏற்பட்டது தொடர்பாக வளநாடு போலீசார் அங்கு வந்து விபத்து தொடர்பாக வரைபடம் தயார் செய்தார்கள். அது தொடர்பாக என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை தயார் செய்து எங்களிடம் அங்கு வைத்து கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் தான் நான் கையெழுத்து செய்தேன். **பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**2.** சம்பவ இடமானது திருச்சி – மதுரை,தேசிய நெடுஞ்சாலை, நான்கு வழிச்சாலை என்றால் சரிதான். திருச்சி – மதுரை,தேசிய நெடுஞ்சாலை தெற்கு வடக்காக செல்கிறது என்றால் சரிதான். சம்பவ இடமானது கைக்காட்டி பாலத்தின் தென்பகுதி முடிவில் வேகத்தடை அருகில் சம்பவம் நடந்தது என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் கிழக்கு,மேற்கு பகுதிகளில் கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தின் பாலத்திற்கு அடியில் பஸ் நிறுத்தம் உள்ளதா என்றால் இல்லை. பாலத்தின் கீழ் கிழக்கு பகுதியில் வளநாடு

செல்லும் பிரிவு ரோடும், மேற்கு பகுதியில் சுக்காம்பட்டி செல்லும் பிரிவு ரோடு உள்ளது என்றால் சரிதான். நான் பார்த்த போது சம்பவ நடந்த இடமானது கிழக்கு பகுதி சர்வீஸ்ரோட்டை ஒட்டி வேகத்தடை தென்பகுதி என்று குறியீடப்பட்டது. நான் பார்த்த போதுவிபத்திற்குள்ளான வாகனங்கள் அங்கு இல்லை. சம்பவ இடத்தை சுமார் எத்தனை நபர்கள் வேடிக்கை பார்த்திருப்பார்கள் என்றால் எங்களை தவிர சுமார் 20 நபர்கள் வேடிக்கை பார்த்திருப்பார்கள்.

3. நான் கையெழுத்து செய்த பார்வை மகசரில் விபத்திற்குள்ளான இருசக்கரவாகனத்திற்கு சேதாரம் மற்றும் காயம்பட்ட நபர் தார் ரோட்டின் எந்த பகுதியில் கிடந்தார் என்ற விபரம் இருந்ததா என்றால் இருந்தது. சம்பவம் சம்மந்தமாக அருகில் உள்ள கடைக்காரர்களை யாரையாவது விசாரித்தார்களா என்பது பற்றி தெரியுமா என்றால் விசாரித்தார்கள். தார் சாலையின் இருபுறமும் தேசிய நெடுஞ்சாலையால் விளம்பரபலகைகள் உள்ளது,அந்த விளம்பர பலகையில் உயர் மட்டம் பாலம் உள்ளதாகவும், தார் ரோட்டின் இருபுறமும் பிரிவு சாலைகள் உள்ளதாகவும், தார் ரோட்டின் இருபுறமும் சர்வீஸ் சாலையில் வேகத்தடைகள் உள்ளதாக விளம்பரங்கள் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

4. சம்பவம் நடந்தன்று நான் அங்கு தான் இருந்தேன். இருசக்கரவாகனத்தின் டயர் தடம் ஏதும் சம்பவ இடத்தில் இருந்ததா என்றால் இல்லை. நான் கையெழுத்து செய்த பேப்பரில் உயர் மட்டும் பாலம் அந்த இடத்தில் இருந்ததாகவும், இருபுறமும் சர்வீஸ் ரோடு இருந்ததாக எழுதப்பட்டிருந்தது என்றால் நான் படித்து பார்க்கவில்லை. சம்பவ நடந்த நேரம் காலை 06.00 – 07.00 மணியிருக்கும். காயம்பட்டு இறந்த நபர் எனது சின்னம்மா ஆவார். விபத்து கோரி நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த கையெழுத்தை வளநாடு காவல்நிலையத்தில் வைத்து எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 16.06.2026 | |
| CC No. 05/2025 | |
| சாட்சி :PW5 | |
| பெயர் : திரு. மாணிக்கம் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. மலையாண்டி | தொழில் : கூலி |
| கிராமம் : கோட்டைபளுவஞ்சி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 56/2026 |
| எதிரி ஆஜர் இல்லை , வழக்கறிஞர் ஆஜர்) | |

------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகரில் உள்ள இரண்டவாது கையெழுத்து என்னுடையதுதான். மூக்காயி என்பவருக்கு விபத்து ஏற்பட்டது தொடர்பாக தகவலறிந்து நான் ஊருக்கு வந்திருந்தேன். அப்போது விசாரிப்பதற்காக நான் வளநாடு காவல்நிலையத்திற்கு சென்றிருந்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். அதில் என்ன விபரங்கள் எழுதியிருந்தது பற்றி எனக்கு தெரியாது. **பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

2. வளநாடு கைக்காட்டியில் மூக்காயி இருசக்கரவாகன விபத்தில் சிக்கி காயமடைந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். போலீசார் விபத்து நடந்த இடத்தை விசாரிக்க வந்திருந்தார்களா என்றால் சரிதான். போலீசார் விசாரித்த போது சம்பவ இடத்தில் நான் இருந்தேன் என்றால் சரிதான். என்னோடு சம்பவ இடத்தில்வைத்து மலைச்சாமி என்பவர் கையொப்பம் செய்தார் என்றால் ஆமாம்.

நான் கையெழுத்து செய்த தாளை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் நான் படித்துபார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் எனது கையெழுத்துள்ள பார்வை மகரில் , பார்வை மகசரை சம்பவ இடத்தில் வைத்து காவல் உதவி ஆய்வாளர் திரு. பிரதீப் பார்வையிட்டு தயார் செய்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இருக்க எதிரிக்கு ஆதரவா உண்மை சங்கதிகளை மறைத்து காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக சொல்வது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் கடந்த 20.11.2023 அன்று காலை 07.00 மணியளவில் வளநாடு, கைக்காட்டி அருகே விபத்து நடந்தஇடத்தில் காவல் உதவி ஆய்வாளர் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதற்கு ஆதாரவாக நானும், மலைச்சாமிஎன்பவரும் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்துவிட்டு உண்மை சங்கதிகளை மறைத்து எதிரிக்கு ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.